# 25-11-2024 செய்தி

## மத்திய அரசின் வரி வருவாய் பகிர்வில் மாற்றம் தேவை

- புதிதாக 16-வது நிதி ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தின் பரிந்துரைகள் வரும் ஏப்ரல் 2026 முதல் அடுத்த 5 ஆண்டுகளுக்கு அமல் படுத்தப்பட உள்ளது.

**இந்திய அரசியலமைப்பின்**

- 280-வது பிரிவின் கீழ் நிதி ஆணைய சட்டம் (1951) கொண்டுவரப்பட்டது. இதன்படி, ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மத்திய அரசின் பரிந்துரை அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி ஆணையத்தை உருவாக்குகிறார்.
- மத்திய அரசின் வரி வருவாயை மாநிலங்களுக்கு இடையே எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதைப் பரிந்துரை செய்வதே இந்த ஆணையத்தின் முக்கிய பணியாகும்.
- 1951-ம் ஆண்டு முதல் இதுவரை 15 நிதி ஆணையங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் பரிந்துரைகளின்படி வரி வருவாய் மாநிலங்களுக்கு பகிரப்பட்டிருக்கின்றன. 15-வது நிதி ஆணையத்தின் (ஏப்ரல் 2020- மார்ச் 2026) பரிந்துரைப்படி, ஆண்டு வரி வருவாயில் 41 சதவீதத்தை மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் வரி வசூலை விநியோகிக்கப் பயன்படுத்தப்படும் அளவு கோல்களில், வருமான வித்தியாசம். அதாவது, அதிக வருமானம் உள்ள மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களின் வருமான வித்தியாச அளவு மற்றும் மாநில மக்கள் தொகை ஆகியவை முக்கியமானவை ஆகும்.

**மாநில அரசுகள் அதிருப்தி**

- இதனிடையே, மத்திய அரசு பகிர்ந்து கொடுப்பது பாரபட்சமாக இருப்பதாகவும், போதுமானதாக இல்லை என்றும் தென் மாநிலங்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தி இருக்கின்றன.
- ஏழைகள் மற்றும் அதிக மக்கள்தொகை கொண்ட உத்தர பிரதேசம் (18%) மற்றும் பிஹார் (10%) ஆகிய 2 மாநிலங்களுக்கு மட்டுமே மொத்த வரி வருவாயில் 28% வழங்கப்படுகிறது.
- ஆனால், தமிழ்நாடு (42%), கர்நாடகா (3.65%) தெலுங்கானா (2.13%), ஆந்திரப் பிரதேசம் (4.11%) மற்றும் கேரளா (1.96%) போன்ற மாநிலங்கள், வரிவருவாயில் இருந்து தங்களுக்கு குறைவான அளவே பகிர்ந்து அளிக்கப்படுகிறது என குறை கூறுகின்றன. நல்ல பொருளாதார வளர்ச்சி பெற்றிருப்பதுடன், குறைவான மக்கள் தொகை கொண்டிருக்கும் எங்கள் மாநிலங்களை தண்டிப்பது போல இது உள்ளது எனவும் கூறுகின்றன.

**குறைவான நிதிப் பகிர்வு**

- இதுமட்டுமல்லாமல், மாநில அரசுகளுக்கு பகிரப்படும் வரி வருவாய் நிதி ஆணையம் பரிந்துரை செய்துள்ள விகிதத்தைவிட குறைவாகவே வழங்கப்பட்டிருக்கிறது.
- உதாரணமாக மத்திய அரசின் வரி வருவாயில், 32 சதவீதத்தை மாநில அரசுகளுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என 14-வது நிதி ஆணையம் பரிந்துரை செய்தது.
- ஆனால் ஆணையத்தின் 5 ஆண்டு காலத்தில் (ஏப்ரல் 2015 - மார்ச் 2020) சராசரியாக ஆண்டுக்கு 27.9 சதவீதம் மட்டுமே வரி வருவாய் பகிரப்பட்டுள்ளது.
- இதுபோல மத்திய அரசின் வரி வருவாயில் 41 சதவீதத்தை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று 15-வது நிதி ஆணையம் பரிந்துரைத்த போதும், 31 சதவீதமே பகிரப்பட்டிருக்கிறது.

**செஸ், கூட்டு வரியை பகிர வேண்டும்**

- அரசியலமைப்பு ரீதியாக, நிதி ஆணையம் மாநில அரசுகளுக்கு, பகிர்ந்து அளிக்கக்கூடிய வரிகள் தொகுப்பில் செஸ் (Cess) மற்றும் கூட்டு வரி (Sub Charge) அடங்காது (சட்டப்பிரிவுகள் 268, 269 மற்றும் 270) , கூட்டு வரி என்பது வரிகள் மீதான கூடுதல் கட்டணம் ஆகும்.
- செஸ் வரி என்பது குறிப்பிட்ட நோக்கங்களுக்காக குறிப்பிட்ட காலத்துக்காக விதிக்கப்படும் வரி ஆகும் .
- இந்த இரண்டு வரிகளையும் பகிரக்கூடிய வரிகள் தொகுப்பில் சேர்க்க அரசியலமைப்பு சட்டத்தை திருத்த வேண்டும். அல்லது இந்த 2 வரிகளின் வருவாய் மூலமாக மாநில அரசுகளுக்கு வழங்கும் இழப்பீடு பங்கை அதிகரிக்க வேண்டும் என்று 14-வது நிதி ஆணையம் கொடுத்த பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

**செஸ், கூட்டு வரி வருவாய் அதிகரிப்பு**

- மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் செஸ் மற்றும் கூட்டு வரிகளின் பங்கு பல ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது.
- 2017-18 முதல் 2022-23 வரை மத்திய அரசு பல்வேறு பொருட்களுக்கு விதிக்கப்பட்ட முக்கிய செஸ் மற்றும் கூட்டு வரிகள் 133 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இது 2017-ல் ரூ.2,18,553 கோடியாக இருந்தது. 2022-23ல் ரூ.5,10,549 கோடியாக அதிகரித்துள்ளது. (நிதி அமைச்சக தரவுகளின்படி)
- வரி வருவாயில் செஸ் மற்றும் கூட்டுவரி வருவாயின் பங்கு அதிகமாவதால், மொத்தத்தில் மாநில அரசுகளுக்கு பகிரப்படும் நிதிப் பங்கு குறைந்து கொண்டிருக்கிறது. இதனால் மாநில அரசுகளுக்கு நிதி இழப்பு ஏற்படுகிறது.

**பொருளாதார கட்டமைப்பு மாறிவிட்டது**

- நாடு சுதந்திரம் அடைந்தபிறகு கட்டுப்படுத்தப்பட்ட பொருள் உற்பத்தி மற்றும் நிதிக் கொள்கை அமலில் இருந்தது. ஆனால் 1990-களில் தாராளமயமாக்கல் கொள்கை அமலுக்கு வந்தது. இதனால் பொருள் உற்பத்தி அதிகரித்தது.
- இந்திய பொருளாதாரம் தொடக்கத்தில் குறைவான ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (ஜிடிபி) வளர்ச்சி பொருளாதாரமாக இருந்தது.
- ஆனால் தாராளமயமாக்கப்பட்ட பிறகு இந்தியா உயர் தொழில்நுட்பத்துடன் வேகமாக வளரும் பொருளாதாரமாகிவிட்டது.
- தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்கள் 75 வருடங்களுக்கு முன்பு மிகப் பின்தங்கிய பொருளாதாரமாக இருந்தன.

- ஆனால், இப்போது மனிதவளக் குறியீடுகளிலும், ஏழ்மையைக் குறைப்பதிலும் முன்னோடி மாநிலங்களாக மாறியுள்ளன.
- ஆனால் உத்தரபிரதேசம் 18% பங்கு, பிஹார் (10%) ஆகிய மாநிலங்கள் 75 ஆண்டுகளாக 15 நிதி ஆணையங்கள் மூலமாக அதிகமான வரி வருவாயை தொடர்ந்து பெற்று வந்தன.
- ஆனாலும், இம்மாநிலங்கள் இன்னும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே நீடித்து வருகின்றன.
- இதை எதைக் காண்பிக்கிறது? 75 வருடங்களாக தொடர்ந்து அதிக வரி வருவாய் பகிர்வை அனுபவிக்கும் உத்திரபிரதேசத்தில் போன்ற மாநிலங்கள் பின்தங்கிய நிலையிலிருந்து விடுபடவில்லை என்பதையே காண்பிக்கிறது.
- உதாரணமாக எத்தியோப்பியா ஒரு காலத்தில் கடுமையான ஏழ்மையைப் போக்க பல நாடுகளிலிருந்து ஏராளமான நிதியுதவிகளை பல ஆண்டுகளாக பெற்று வந்தது.
- இலவசமாக உணவு பொருட்கள் கிடைத்ததால் மக்கள் உழைக்காமல் இருந்தனர். இதனால் ஏழ்மை நிலை தொடர்ந்து கொண்டிருந்தது.

**பகிர்வு அளவுகோல்களில் மாற்றம் தேவை**

- 75 ஆண்டுகளாக 15 நிதி ஆணையங்கள் ஒரே மாதிரியான அளவுகோல்களை உபயோகித்து மத்திய அரசின் வரி வருவாயை பகிர்ந்து அளிக்க பரிந்துரை செய்தன.
- இந்த நீண்ட காலத்தில், இந்தியப் பொருளாதாரம் கணிசமான கட்டமைப்பு மற்றும் நிதித்துறை சார்ந்த மாற்றங்களை அடைந்துள்ளது.
- எனவே, நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்படும் வரி வருவாய் பகிர்வு அளவுகோல்களை இன்றைய பொருளாதார கட்டமைப்புக்கு, ஏற்றபடி முற்றிலும் மாற்றி அமைக்க வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் பொருளாதார முன்னேற்றத்தையும் வறுமைக் குறைப்பையும் விரைவு படுத்தக்கூடிய புதிய வரி வருவாய் பகிர்வு முறையை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

## ஆயுஷ்மான் பாரத் திட்டம்?

- தமிழகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன், 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா' என்ற திட்டமும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகிறது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பயனாளியின் குடும்பத்துக்கு ஆண்டுக்கு ரூ.5 காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்கான ஆண்டு வருமானம் ரூ.1.20 லட்சம் இத்திட்டத்தில் 1 கோடியே 45 லட்சம் குடும்பங்கள் இணைந்துள்ளன.
- தனியார் மருத்துவமனைகளில் ஏழைகள் உயர்தர சிகிச்சை பெறுவதற்காக கொண்டு வரப்பட்ட இந்த காப்பீட்டு திட்டம்.
- காலப்போக்கில் அரசு மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- ஆனால், முதல்வர் காப்பீட்டு திட்டத்தில் இணைந்துள்ள பெரும்பாலான தனியார் மருத்துவமனைகளில் பெரும்பாலும் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சையளிக்க மறுக்கிறார்கள்.
- சிலர், "நாங்கள் காப்பீட்டுத் திட்டத்தில் இந்த நோய்க்கு மட்டும் தான் சிகிச்சையளிப்போம்" எனவும் தட்டிக் கழிக்கிறார்கள்.
- இந்நிலையில், 70 வயது மூத்த குடிமக்களுக்காக ரூ.5 லட்சம் மதிப்பிலான ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தை பிரதமர் மோடி அண்மையில் தொடங்கி வைத்தார்.
- இதன் மூலம், எவ்வித வருமான வரம்புமின்றி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கட்டணமின்றி சிகிச்சை பெறமுடியும்.
- ஆனால், தமிழகத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டம் பயன்பாட்டுக்கு வராததால், இத்திட்டத்தில் காப்பீடு அட்டை பெற்றும் மூத்த குடிமக்களால் சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
- "ஆயுஷ்மான் திட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவது தொடர்பான மத்திய அரசின் வழிகாட்டுதலுக்காக காத்திருக்கிறோம் தமிழகத்தில் அமலில் உள்ள முதல்வர் காப்பீட்டு திட்டத்தில் உள்ள 70 வயதுக்கு மேற்பட்டவர்களும், இந்த புதிய காப்பீட்டு திட்டத்தில் பயன்பெற முடியும்.
- அதேபோல், மூத்த குடிமக்களுக்கான காப்பீட்டு திட்டத்தில் புதிதாக இணைந்தவர்களும் பயன் பெறலாம்" என்றார்.
- மருத்துவர்களோ, காப்பீட்டுத் திட்டத்தில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக காப்பீட்டு நிறுவனங்கள் அளிக்கும் தொகை மிகவும் குறைவாக இருப்பதால், மீதி தொகையை நோயாளிகளிடம் கேட்கிறார்கள். இதில் பிரச்சினை வருவதால் சில தனியார் மருத்துவமனைகள் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சையளிக்க மறுக்கிறார்கள்.
- இதுவே, அரசு மருத்துவமனைகளில் காப்பீட்டு திட்டத்தில் சிகிச்சைபெற்றால் அதன் மூலம் கிடைக்கும் காப்பீட்டு தொகையானது மருத்துவமனைகளின் மேம்பாட்டுக்கும், சிகிச்சையளித்த மருத்துவக் குழுவுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## தெற்குலகுக்கு 30,000 கோடி டாலர் பருவநிலை நிதி போதாது

- கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கு தெற்குலகம் கோரி வரும் 1.3 லட்சம் கோடி டாலர் நிதியிலிருந்து தற்போதைய அறிவிப்பு வெகுகுறைவாக இருப்பது இந்தியா உள்ளிட்ட நாடுகளின் கவலையாக உள்ளது.

**மிகுந்த ஏமாற்றம்:**

- தெற்குலக நாடுகளின் பருவநிலை நடவடிக்கைகளுக்கு 2030-க்குள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 1.3 லட்சம் கோடி டாலர் தேவைப்படும் என்று மதிப்பீடுகள் கூறுகின்றன.
- ஆனால், 30,000 கோடி டாலருக்கு நிதியைச் சுருக்கி வெளிவந்துள்ள இந்த அறிவிப்பு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
- 2035-ஆம் ஆண்டு வரை நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த இலக்கு மிகவும் குறுகியதாகவும் எங்களின் கோரிக்கையில் இருந்து நீண்ட தொலைவிலும் உள்ளது. வளரும் நாடுகளின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை இந்த நிதி பூர்த்தி செய்யாது. இந்த நிதித் தொகுப்பை ஏற்றுக்கொள்வதை நாங்கள் எதிர்க்கொள்கிறோம்.

**வளரும் நாடுகளுக்குப் பாதிப்பு:**

- 'பருவநிலை மாற்றத்தால் வளரும் நாடுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. அவற்றின் வளர்ச்சி தடைப்பட்டாலும் கூட, குறைந்த கார்பன் உமிழ்வை நோக்கிய பாதைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
- மாநாட்டில் முன்மொழியப்பட்டுள்ள இந்த முடிவு பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வளரும் நாடுகளின் திறனை மேலும் பாதிக்கும்.
- வளர்ந்த நாடுகள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற விரும்பாததை இந்த முடிவு தெளிவாக பிரதிபலிக்கிறது' என்றார்.
- இந்தியாவை ஆதரித்த நைஜீரியா, '30,000 கோடி டாலர் பருவநிலை நிதி தொகுப்பு ஒரு நகைச்சுவை' என்று கூறியது. மலாவி, பொலிவியா ஆகிய நாடுகளும் இந்தியாவின் கருத்துக்கு ஆதரவு அளித்தன.